# Kid Naturalist 2025

## ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்கள்

### 01. நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்

பரீட்சை சார்ந்த கல்வி முறையின் விளைவாக, பிள்ளைகள் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் இயற்கை சூழலுடன் பழகுவதற்குமான நேரம் வெகுவாகக் குறைந்து வருகிறது. ஆதலினால், பிள்ளைகள் இயற்கையோடு பழகுவதற்கும், அவர்கள் தமது வாழ்க்கைச் சூழலைப் பாராட்டி நேசிக்கும் மற்றும் மதிக்கும் பொறுப்புள்ள குடிமக்களாக மாறுவதற்கும் பயிற்சி அளிப்பது மிகவும் அவசியம் ஆகும். எனவே, அரசாங்கத்தில் தம்மை பதிவு செய்துக்கொண்ட தனியார் கல்வி நிறுவகங்கள் உட்பட நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் தரம் ஒன்று முதல் ஆறாம் வகுப்பு வரையிலான பிள்ளைகளுக்காக கல்வி அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் அடங்கும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆண்டுதோறும் இந்த Kid Naturalist நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

### 02. பிள்ளைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பெறுவது எவ்வாறு

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படைக் கருத்தானது, ஒரு பிள்ளை 6 வார காலத்திற்கு அவர்களின் வாழ்க்கைச் சூழலில் அல்லது அவர்களது பாடசாலையினை சுற்றியுள்ள சூழலில் நிகழும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இயற்கை நிகழ்வு/உயிரினம்/தாவரமொன்றை அவதானித்து பதிவுசெய்வதாகும். அவர்கள் தங்கள் அவதானிப்புகளைப் பதிவுசெய்து, அவதானிப்புகளின் அடிப்படையில் "இயற்கை பற்றிய குறிப்பிதழ்" ஒன்றைத் தயாரிக்க வேண்டும். இந்த முழு நடவடிக்கைக்கும் 8 வார கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

### 03. மாணவர்களின் கருத்திட்டங்கள் தொடர்பில் சில உதாரணங்கள்

1. பிள்ளைகள் தங்கள் தோட்டத்திற்கு/வயல்வெளிக்கு/மற்றொரு சௌகரியமான இடத்திற்கு வரும் பறவையொன்றை அவதானித்து, அவற்றின் நடத்தை, அவற்றின் உணவுப் பழக்கம் (e.g. நிலத்தினை தோண்டி உணவு தேடுதல், தாவரப் பொருட்களை தேடி உண்ணுதல் போன்றவை), உணவைத் தேடுவதற்கு அவற்றின் உடல் வடிவமைந்துள்ள விதம் (e.g. சொண்டு, கால், கழுத்து போன்றவை), அவற்றின் வாழும் முறை (e.g. கூட்டமாக, ஜோடி அல்லது தனிமையில் வாழ்வது போன்றவை) போன்றவற்றினை அவதானித்து பதிவு செய்யலாம். மேலும் சுற்றுச்சூழலுக்கு இந்த விலங்குகளினால் ஏற்படக்கூடிய நன்மைகள் அல்லது தீங்குகள், அவற்றின் இசைவாக்கம் மற்றும் அவற்றின் தனிப்பட்ட நடத்தைகளைக் கண்டறிய பிள்ளைகளுக்கு வழிகாட்டவும்.

2. தோட்டத்தில் ஒரு பூச்சியைத் தேர்ந்தெடுக்க (e.g. எறும்புகள், சிலந்திகள், வண்டுகள், ladybirds, அந்துப்பூச்சிகள் போன்றவை) மற்றும் அவற்றின் நடத்தையை அவதானிக்க பிள்ளைக்கு சிறிது நேரம் கொடுங்கள். மேலும் அவற்றை கூர்ந்து அவதானிக்க கை வில்லையினை பயன்படுத்த மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவும். எதிரிகளிடமிருந்து இயற்கையாக தம்மை பாதுகாத்துக் கொள்ள அவை எப்படித் தகவமைத்துக் கொள்கின்றன (e.g. உருமறைப்பு, வண்ண வடிவங்கள், உடல் வடிவம் போன்றவை), அவை தமது வாழ்விடங்களை எவ்வாறு தயார் செய்கின்றன,

அவற்றின் உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அவதானிக்கச் செய்யவும். மற்றும் சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் அவற்றினால் ஆற்றப்படும் நன்மைகள் அல்லது தீங்குகளைக் கண்டறிய மாணவர்களுக்கு வழிகாட்டவும்.

3. அணில், பல்லிகள், குரங்குகள் அல்லது கடமான்கள் போன்ற தோட்டத்திற்கு வரும் விலங்குகளைக் கவனிப்பதற்கு பிள்ளைகளை ஊக்குவிக்கவும். அவற்றின் நடத்தை, உணவுப் பழக்கம், தோற்றம் மற்றும் உருமறைப்பு நுட்பங்களைக் கவனிப்பதில் அவர்களுக்கு வழிகாட்டவும். விரிவான ஆய்வினை முன்னெடுப்பதற்கு ஒரு விலங்கு மீது கவனம் செலுத்துங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட விலங்கின் விஞ்ஞானவியல் பெயர், பொதுவான பெயர்கள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் (நேர்மறை மற்றும் எதிர்மறை இரண்டும்) ஆகியவற்றை ஆராய்ச்சி செய்வதில் பிள்ளைக்கு உதவுங்கள். அவர்களின் கண்டுபிடிப்புகளை பதிவு செய்யுங்கள். தினமும் அவதானிக்க கூடிய ஒரு விலங்கைத் தேர்வு செய்யவும்.

4. நீங்கள் பறவை தீவனத்தை (bird's feeder) தேர்ந்தெடுக்கிறீர்கள் என்றால், அதனை தினசரி பார்வையிட்டு அதற்கு வருகின்ற ஒரு குறிப்பிட்ட பறவை இனத்தை கவனிக்கவும். அப்பறவையின் நடத்தை, பிற பறவைகளுடனான தொடர்பு, உணவுப் பழக்கம், மற்றும் அவற்றின் சிறப்பு அம்சங்கள் என்பவற்றை பார்வையிடவும்.

## 04. தவிர்க்க வேண்டிய கருத்திட்டங்கள்

போதுமான தகவல்கள் அல்லது புதிய தகவல்களை வழங்க முடியாமை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் முதன்மை குறிக்கோளை பூர்த்தி செய்ய முடியாமை போன்ற காரணங்களினால் கீழ்வரும் வகை அவதானிப்புக்களை கருத்திட்டங்களாக மேற்கொள்வது ஊக்குவிக்கப்படவில்லை.

1. வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள், செல்லப்பிராணிகள், வீட்டுப்பறவைகள் மற்றும் பண்ணை விலங்குகளின் நடத்தை மாதிரிகள்.
2. மழைக்காலங்களில் வானத்தில் மேகங்களின் அமைப்பு.
3. பள்ளி பாடத்திட்டத்தில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள், உதாரணத்திற்கு பச்சை பயறு அல்லது சதுர அவரை முளைத்தல், வண்ணத்துப்பூச்சி அல்லது வாற்பேயின் வாழ்க்கை சக்கரம்.

## 05. அவதானிப்பு செயன்முறைகள்

1. தினமும் வெற்றிகரமாக செய்யக்கூடியதும் தொடர்ச்சியாக ஆறு வாரங்கள் வரை நடத்தக்கூடியதுமான ஒரு கருத்திட்டத்தை தேர்வு செய்க.
2. அவதானிப்புக்கள் அந்த ஆறு வார காலத்தில் தினமும் ஒரு குறிப்பிட்ட நேர இடைவெளியில் செய்யப்பட வேண்டும் மற்றும் அவற்றை குறிப்பிதழில் (journal) தெளிவாக குறிப்பிட வேண்டும். மேலும் மாணவர்கள் இவ்விடைப்பட்ட காலத்தில் வானிலையைப் பதிவு செய்யலாம். சிறப்பு சந்தர்ப்பங்களில் மாணவர்கள் மேலதிக நேரங்களிலும் அவதானிப்புக்களை மேற்கொள்ளலாம்.
3. உங்கள் அவதானிப்புக்களை ஆதரிக்கவும் மற்றும் அவற்றை தெளிவுபடுத்தவும் படங்களை வரையலாம்.
4. எழுதுவதில் சிரமங்களைக் காணும் பிள்ளைகள் அவர்களது அவதானிப்புகளை வெளிப்படுத்த வரைபடங்கள் மற்றும் படங்களை அதிகம் பயன்படுத்தலாம். அவ்வரைபடங்கள் மாணவர் செய்த அவதானிப்புகளை தெளிவாகவும் வலுவாகவும் வெளிப்படுத்த வேண்டும். இருப்பினும், முதலாம் வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவர்கள் வரைபடங்கள் மட்டும் பயன்படுத்தாமல் எழுதியும் தமது அவதானிப்புகளை பதிவு செய்ய வேண்டும்.
5. குறிப்பிதழை (journal) தயாரிக்கும் போது, வரைபடங்கள், உலர்ந்த பூ மற்றும் இலைகள், படங்கள் போன்ற பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி பிள்ளை தனது அவதானிப்புகளை

சுதந்திரமாக முன்வைக்க அனுமதிக்கவும். தயவுசெய்து முறையாக உலர்த்தப்பட்ட தாவரப் பொருட்களை மாத்திரமே பயன்படுத்தவும்.

6. கருத்திட்ட காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு புத்தகங்கள், இணையம் அல்லது தெரிந்த நபரிடமிருந்து தகவல்களைக் கண்டறிய மாணவர்களுக்கு வழிகாட்டவும்.

7. பிள்ளைகளினது எண்ணங்கள் அல்லது வெளிப்பாடுகளில் குறுக்கிடாது, மொழி, இலக்கணம் மற்றும் வார்த்தைகளை முடிந்தவரை துல்லியமாக பயன்படுத்த உதவவும்.

8. தேவையான இடங்களில் மட்டும் புகைப்படங்களைப் பயன்படுத்தவும். தட்டச்சு செய்யப்பட்ட குறிப்பிதழ்கள் ஏற்கப்படமாட்டாது. பிள்ளையின் படைப்பாற்றலுக்கு எப்போதும் முன்னுரிமை கொடுங்கள். பத்திரிகைகள், புத்தகங்கள், இணையம் போன்ற பிற ஆதாரங்களில் இருந்து எடுக்கப்பட்ட படங்களை குறிப்பிதழினை தயாரிக்கப் பயன்படுத்த வேண்டாம்.

9. தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்பட்ட இயற்கை பற்றிய குறிப்பிதழின் (இணைப்பு III) வடிவமைப்பை வழிகாட்டியாக பயன்படுத்த வேண்டுமே தவிர பிள்ளைகளின் படைப்பாற்றலைத் தடுக்க கூடாது. மேலும் அந்த வடிவமைப்பை அச்சிட்டு அவதானிப்புகளை எழுத பயன்படுத்தக்கூடாது.

10. குறிப்பிதழின் அட்டைப் பக்கமானது பிள்ளையினது கைவினையாக இருத்தல் வேண்டும் மற்றும் தலைப்பு கையெழுத்தில் எழுதப்பட வேண்டும்.

11. தேசிய விஞ்ஞான மன்றமானது 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் kid naturalist நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவுரைத் தொடரை ஒழுங்கமைப்பு செய்வதற்கு உள்ளது. இதைப் பற்றிய மேலதிக விபரங்களினை தேசிய விஞ்ஞான மன்றத்தின் அதிகாரப்பூர்வ you tube அலைவரிசை மற்றும் அதிகாரப்பூர்வ முகப்புத்தக பக்கத்துடன் இணைவதன் மூலம் பெறலாம். (https://www.youtube.com/channel/UCWziS21LQ1L9xSDUZAKD5dw).

06. **இயற்கை பற்றிய குறிப்பிதழை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்**

1. அறிக்கையிடலில் பெரியவர்கள் பயன்படுத்தும் உயர் தொழில்நுட்ப, விஞ்ஞான சொற்கள் அல்லது மொழியைப் பயன்படுத்துமாறு பிள்ளைகளினை வழிநடத்துவதைத் தவிர்க்கவும். பிள்ளைகள் தங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி இதழை எழுதட்டும்.

2. அறிவுறுத்தல் காகிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு இயற்கை பற்றிய குறிப்பிதழில் பக்கங்களைச் சேர்க்கவும். மதிப்பீட்டின் போது தளர்வான காகிதங்கள் அல்லது ஒழுங்கற்ற முறையில் சேகரிக்கப்பட்ட காகிதங்கள் ஒரு பத்திரிகையாக கருதப்பட மாட்டாது.

3. விலையுயர்ந்த காகிதம் அல்லது எழுதுபொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். பத்திரிகையை தயாரிப்பதற்கு வெற்று காகிதத்தை (வெள்ளை அல்லது நிறம்) பயன்படுத்தவும்.

**07. நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு செய்தல்**

நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் கீழ்வரும் கூகுள் படிவத்தைப் (Google form) பயன்படுத்தி விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து பதிவு செய்யலாம்.

https://forms.gle/9eBpxXfe1C3RvcHdA

**கவனிக்க வேண்டிய முக்கியமான நாட்கள்:**

1. நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு செய்ய முடிவுத்திகதி: 2025, ஆகஸ்ட் 29
2. கருத்திட்டத்தின் தொடக்கம்: 2025, ஆகஸ்ட் 29 (அவதானிப்பு நடவடிக்கைகளுக்காக 6 வாரங்களும் குறிப்பிதழை தயாரிக்க 2 வாரங்களும் வழங்கப்படும்)
3. குறிப்பிதழை சமர்ப்பிப்பதற்கான முடிவுத்திகதி: 2025, அக்டோபர் 31

08. **இயற்கை பற்றிய குறிப்பிதழினை சமர்ப்பித்தல்**

தலைமையாசிரியரின் அத்தாட்சிபடுத்தலுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவம் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய விஞ்ஞான மன்றம்**
**47/5, மெய்ட்லன்ட் பிளேஸ்**
**கொழும்பு 07**

**குறிப்பு:**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ( www.nsf.gov.lk) போட்டியில் வெற்றி பெற்றவர்களது விபரங்கள் அறிவிக்கப்பட்ட பின்பு ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்கப்பட்ட இயற்கை பற்றிய குறிப்பிதழினை பெற்றுக்கொள்ளலாம். அ**க் காலப்பகுதிக்**குள் சேகரிக்கப்படாத குறிப்பிதழ்கள் அகற்றப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:**

Ms சமரிகா / Ms அஞ்சலி
தொலைபேசி: 0112696771
இணைப்பிலக்கம்: 185/181